**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 107/2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 தங்கவேல் திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியார்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.03.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1) சர்வே எண்.1555/1ல் உள்ள முட்களை வெட்டி விற்று பணமாக்கி அதை நாங்கள் பிரித்துக் கொண்டதாக சொல்லும் நிகழ்வு கடந்த மாசி மாதமா என்றால் ஞாபகம் இல்லை அவரவர் பாகத்தில் உள்ள முட்களை வெட்டினோம். நான் சொல்வது தவறு என்றும் ஒரே வியாபாரியை வைத்து ஒன்றாக தான் அனைவரும் பொதுவில் முட்களை வெட்டினோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.1571/4 நிலத்தில் காமாக்காளிடமிருந்து பெருமாள் விலைக்கு வாங்கிய பத்திரம் உள்ளதா என்றால் அவர்களிடம் இருக்கும். பெருமாள் வகையறாவுக்கும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்.

2) பெருமாள் வகையறாவிடம் மேற்படி கிரைய ஆவணம் உள்ளதா என நான் கேட்கவில்லையா என்றால் ஆமாம். காமாக்காளிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எத்தனை திறந்த கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் உள்ளது என்றால் ஆழ்துளை கிணறுகள் இல்லை. நான்கு கிணறுகள் உள்ளது. அதில் தண்ணீர் இல்லை. இரண்டு கிணறுகளில் மின் இணைப்பு உள்ளது. அதன் எண்கள். 11, 45 ஆகும். மின் இணைப்பு எண்.11 சர்வே எண்.1574/1ல் உள்ளது என்றால் ஆமாம். மின் இணைப்பு எண்.45க்கான சர்வே எண் ஞாபகம் இல்லை. சர்வே எண்.1571/6ல் மின் இணைப்பு எண்.45 உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. மின் இணைப்பு எண்.45 உள்ள கிணற்றில் எங்களுடன் சேர்த்து எர்ரம்ம நாயக்கர், சின்னம்ம நாயக்கர் ஆகியோரின் குடும்பத்திற்கும் கூட்டாக பாத்தியப்பட்டது.

3) மின் இணைப்பு எண்.45 ஆனது தம்மா நாயக்கர், கொண்டம நாயக்கர், பழனிச்சாமி, எர்ரம்ம நாயக்கர், சின்னம்ம நாயக்கர், பெருமாள் நாயக்கர் ஆகிய 6 பேருக்கும் பாத்தியப்பட்டது. மின் இணைப்பு எண்.11, 45 இரண்டும் பெருமாள் நாயக்கர் பெயரில் தான் உள்ளது. மின் இணைப்பு வேண்டி மனு யார் கொடுத்தது என்றால் பெருமாள் நாயக்கர் கொடுத்தார். மின் இணைப்பு 11, 45ம் கூட்டாக உள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.1573/2ல் மின் இணைப்பு எண்.15 உள்ளதா என்றால் இல்லை. மின் வாரியத்தில் எங்கள் குடும்பத்திற்கு நான்கு மின் இணைப்புகள் கொடுக்க தயார் நிலையில் உள்ளதா என்றால் பழனிச்சாமிக்கு இரண்டு மின் இணைப்பும், பெருமாள் நாயக்கருக்கு இரண்டு மின் இணைப்பும் கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் பழனிச்சாமியின் மகன் முருகவேல் ஆட்சேபனை தெரிவித்ததால் மேற்படி மின் இணைப்பு கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மேற்படி நான்கு மின்

இணைப்புகளும் கிணற்றுக்கு வரக்கூடியதா அல்லது ஆழ்துளை கிணற்றுக்கு வரக்கூடியதா என்றால் கிணற்றுக்காக பெறப்பட்டது. எந்த சர்வே எண்ணில் உள்ள கிணறுகள் என்றால் அது தெரியாது.

4) மேற்படி நான்கு மின் இணைப்புகளும் இலவச மின் இணைப்புகள் என்றால் ஆமாம். ரெங்கம நாயக்கர் வாழ்ந்து வந்த வீடு தற்போது உள்ளதா என்றால் கூரை வீடு உள்ளது அது பழனிச்சாமி நாயக்கருக்கு ஒதுக்கப்பட்டது. ஓட்டு வீடுகளும், கூரை வீடுகளும் அருகருகே உள்ளதா என்றால் அருகில் தான் உள்ளது. ஒரே வாசலை கொண்டது. ஓட்டு வில்லை வீட்டில் யார் வசித்தார்கள் என்றால் எனது தகப்பனாரும், பெருமாள் நாயக்கரும் தலா ஒரு வீட்டில் இருந்தார்கள். கொண்டம நாயக்கர் எங்கு வசித்தார் என்றால் பாப்பாநாயக்கனூரில் இருந்த கூரை வீடு அவருக்கு ஒதுக்கப்பட்டு அவர் வசித்து வந்தார். அது பூர்வீக வீடாகும்.

5) எனது பாட்டனார் ரெங்கம நாயக்கர் தனது இறுதி காலத்தில் யாருடன் இருந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருமாள் நாயக்கர், பழனிச்சாமி, தம்மா நாயக்கர் ஆகியோர்கள் ஒன்றாக வசித்த போது குடும்ப பெண்களுக்கு இடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டதால் பழனிச்சாமி நாயக்கர் சர்வே எண்.1571/2ல் தனியாக வீடு கட்டி குடியிருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. மேற்படி சொத்து கொண்டம நாயக்கர், பழனிச்சாமி தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டது என்றும் அது குடும்ப சொத்து அல்ல என்பதால் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

6) சர்வே எண்.1571/1ல் 22 ஏர்ஸ் நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் தெரியவில்லை. மேற்படி சொத்தை பெருமாள் நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என நான் எனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பெருமாள் நாயக்கர் ஆற்று புறம்போக்கு நிலத்தை அனுபவம் செய்து வந்து பட்டா வாங்கியிருக்கலாம். பொதுவாக அரசாங்கம் நிலம் இல்லாதவர்களுக்கு தான் புறம்போக்கு நிலத்திற்கு பட்டா கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. அருகாமை நிலத்துக்காரர்கள் புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து அனுபவம் செய்து வந்தால் பட்டா கொடுப்பார்கள். சர்வே எண்.1571/1 நிலத்திற்கு அருகில் பெருமாள் நாயக்கர் எந்த சர்வே எண்ணில் நிலம் அனுபவம் செய்து வந்ததற்கு சர்வே எண்.1571/1ல் அவருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை.

7) ரெங்கம நாயக்கர் காலத்திலேயே சர்வே எண்.1571/1 குடும்ப சொத்தாக அனுபவம் செய்யப்பட்டு வந்தது என்றும் ஆனால் பெருமாள் நாயக்கர்

பொய்யாக அவர் பெயருக்கு பட்டா வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்கள் கயிறு கட்டி பாகம் பிரிக்கப்பட்டதாக சொல்லும் நிலையில் மண்ணின் தன்மை மற்றும் நிலத்தின் வகைப்பாடு ஆகியவை கண்டு அனைவருக்கும் சமமாக நிலப்பகுதி பிரிக்கப்பட்டதா என்றால் அவ்வாறு தான் பிரிக்கப்பட்டது. ரெங்கம நாயக்கர் காலத்தில் விவசாயம் செய்த போது நிலத்திற்கு பாசன வசதி, வடிகால் வசதி, பாதை வசதி ஆகியவையும் கண்டு தான் அனுபவம் செய்து வந்தாரா என்றால் ஆமாம்.

8) பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.12 வரையிலான புல வரைபடங்கள் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்களுக்கு உரியது மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் மொத்த சர்வே எண்ணுடனும் சேர்த்து புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1571/6 ல் கிழக்கே சுக்காம்பட்டி செல்லும் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. சர்வே எண்.1571/6 என்பது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தம்மா நாயக்கர் பெயரில் உள்ளது. சர்வே எண்.1571/6 க்கு மேற்கில் சர்வே எண்.1571/5 உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் சர்வே எண்.1571/6 ஐ ஒட்டி மேற்குப்புறம் தான் சர்வே எண்.1571/5 உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.1571/6 ஐ ஒட்டி வீடு உள்ளது. வீட்டிற்கு மேற்கு புறம் தான் சர்வே எண்.1571/5 உள்ளது. மேற்படி வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் அது புறம்போக்கு நிலத்தில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

9) சர்வே எண்.1571/6 ன் மேற்கே உள்ள வீட்டிற்கு நான்குபுறத்திலும் வெவ்வேறு சர்வே எண்களில் நிலங்கள் உள்ளது. அவை குடும்ப சொத்துக்களா என்றால் ஆமாம், தனித்தனியாக பாகம் பிரித்து அனுபவித்து வருகிறோம். சர்வே எண்.1571/6 க்கு மேற்கே உள்ள வீட்டிற்கு சுக்காம்பட்டி செல்லும் ரோட்டில் இருந்து சர்வே எண்.1571/6 வழியாக தான் செல்ல வேண்டுமென்றால் சரியல்ல. வீட்டிற்கு கிழபுறம் 15 அடி அகல பாதை உள்ளது. மேற்படி பாதை புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ பதிவேட்டில் நிலவியல் பாதை என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பாதையை யார் பயன்படுத்திகிறார் என்றால் ரெங்கம நாயக்கரின் வாரிசுகள் அனைவரும் பயன்படுத்துகிறோம்.

10) சுக்காம்பட்டி – இடையப்பட்டி செல்லும் ரோட்டின் கிழக்கே சர்வே எண்.1194/5 ம், அதற்கு கிழக்கே சர்வே எண்.1194/11 ம் உள்ளதா என்றால் சரியல்ல, சர்வே எண்.1194/8, 1194/11 நிலங்கள் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் சர்வே எண்.1194/5 ரோட்டிற்கு கிழக்கிலும், அதற்கு கிழக்கே சர்வே எண்.1194/11 உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.1194/5 பெருமாள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு கிழக்கே எங்கள் குடும்ப பூர்வீக நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1194/5 நிலத்தை ரெங்கம

நாயக்கர் காலத்தில் இருந்து அனுபவம் செய்து வந்தார்களா என்றால் இல்லை, அவர்களுக்கு பாகம் பிரிக்கப்பட்ட பின்னிட்டு பெருமாள் நாயக்கர் தனியாக அனுபவம் செய்து வந்து பட்டா பெற்றுள்ளார்.

11) சர்வே எண்.1194/5 க்கு கிழக்கே யாருக்கு பாகம் பிரிக்கப்பட்டது என்றால் கிழமேலாக 4 பேருக்கும் பாகம் பிரிக்கப்பட்டது. சர்வே எண்.1194/5 ரெங்கம நாயக்கரின் குடும்ப சொத்து என்றும் பெருமாள் தவறாக தன் பெயரில் தவறாக பட்டா ஏற்பட்டுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.1573/3 மற்றும் 1573/5 நிலங்களுக்கு கிழக்கு ஆற்றுவாரி உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி நிலங்கள் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பெருமாள் நாயக்கர் புறம்போக்கு நிலத்தை அனுபவம் செய்து வந்து பட்டா வாங்கியுள்ளார். சர்வே எண்.1573/4 யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியவில்லை. சர்வே எண்.1573/3 மற்றும் 1573/5 ரெங்கம நாயக்கர் குடும்ப சொத்து என்றும், பெருமாள் தவறாக தன் பெயரில் பட்டா ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

12) சர்வே எண்.1573/3 க்கு தெற்கே சர்வே எண்.1573/7 ம், சர்வே எண்.1573/5 க்கு தெற்கு சர்வே எண்.1573/9 நிலங்களும் உள்ளதா என்றால் உள்ளது. அதில் நால்வருக்கும் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது. ரெங்கம நாயக்கர் ஒரே நிலமாக வைத்து அனுபவித்து வந்த சொத்துக்களை பெருமாள் நாயக்கர் குடும்பத்தை பராமரிப்பதாக சொல்லி தன் பெயரில் பட்டா பெற்றுள்ளார் என்றும் அதை வைத்து அந்த சொத்துக்கள் பெருமாள் நாயக்கருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று கூற இயலாது என்றால் சரியல்ல. சர்வே எண்.1573/9 மற்றும் 1573/7 ல் நிலங்களுக்கு எந்த வழியாக பாதை வசதி உள்ளது என்றால் சர்வே எண்.1571/6 க்கு மேற்கே உள்ள வீட்டின் கிழபுறம் உள்ள 15 அடி அகல பாதை வழியாக தான் வர வேண்டும். மேற்படி பாதை வீட்டிலிருந்து வடபுறம் நோக்கி ஆறு வரை செல்கிறது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

13) சர்வே எண்.1571 நிலத்திற்கு கிழபுறம் சர்வே எண்.1570 என்ற சர்வே எண்ணும், மேற்குப்புறம் சர்வே எண்.1574 என்ற நிலமும் தான் உள்ளது என்றும், நான் சொல்வது போல 15 அடி அகல பாதை அமைப்பு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பாதை அ பதிவேட்டிலும், புல வரைபடத்தில் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.1194/11 க்கு எந்த வழியாக செல்ல வேண்டுமென்றால் அதற்கு பாதை வசதி இல்லை. சர்வே எண்.1194/11 ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சுமார் 4 ஏக்கர். ஒவ்வொருவருக்கும் தலா ஒரு ஏக்கர் இருக்கிறது. மேற்படி சர்வே எண்ணில் ஒரு வறண்ட கிணறு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி நிலம் விவசாயம் செய்யப்பட்டுள்ளதால் மானாவரி நிலமாக சோளம், கொள்ளு பயரிடப்பட்டுள்ளது. சர்வே எண்.1194/11 நிலத்திற்கு சர்வே எண்.1194/5 நிலத்தின் வழியாக செல்வோமா என்றால் விவசாயம்

செய்யாமல் உள்ள நிலத்தின் வழியாக சென்று வருகிறோம். யாரும் ஆட்சேபனை செய்வது இல்லை.

14) சர்வே எண்.1574/3 யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தம்மா நாயக்கர் பெயரில் உள்ளது. மேற்படி நிலம் ரங்கம நாயக்கரின் கூட்டுக் குடும்ப சொத்தா என்றால் தம்மா நாயக்கர் அனுபவம் செய்து வந்து அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் மேற்படி சொத்து ரெங்கம நாயக்கரின் குடும்ப சொத்து என்றால் சரியல்ல. தம்மா நாயக்கருக்கு பாகம் பிரிக்கப்பட்ட பின்னிட்டு தான் மேற்படி நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 12ல் 30.12.1992ல் தம்மா நாயக்கர், பெருமாள் நாயக்கர், பழனிச்சாமி, பொம்மா நாயக்கர் மற்றும் சின்னம்ம நாயக்கர் கிரையம் பெற்றதாக சொல்லும் நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியவில்லை. மேற்படி நிலத்தின் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

15) 30.12.1992ல் ஏற்பட்ட கிரையத்திற்கு பழனிச்சாமி, பொம்மா நாயக்கர், சின்னம்ம நாயக்கர் மூவரும் பணம் கொடுக்கவில்லை என்றும் அவர்களுக்கு மேற்படி சொத்தில் அனுபவமோ, உரிமையோ இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, அவர்களும் பணம் கொடுத்துள்ளார்கள். ரெங்கம நாயக்கரின் நான்கு மகன்களுக்கும் விவசாயத்தை தவிர வேறு தொழில் உள்ளதா என்றால் ஆடு, மாடுகள் வளர்த்து விற்பார்கள். 3ம் வாதி தனியாக பேன்சி ஸ்டோர் மற்றும் செருப்பு கடை நடத்துகிறார் என்றால் சரிதான். எத்தனை வருடமாக வைத்துள்ளார் என்றால் தெரியவில்லை. சுமார் 25 வருடங்களாக நடத்தி வருகிறார் என்றால் தெரியவில்லை.

16) பி.சா.ஆ.13 ஆவணத்திற்கான கிரைய தொகை முருகவேல் தனது தொழில் மூலமாக வந்த தனிப்பட்ட வருமானத்தின் மூலமாக வாங்கியது என்றால் சரியல்ல. கொண்டம நாயக்கர் எனது தகப்பனாருடனும், பெருமாள் நாயக்கருடனும் பிரச்சனை ஏற்பட்டு பழனிச்சாமியுடன் சேர்ந்து விட்டாரா என்றால் சரியல்ல. கொண்டம நாயக்கரின் மகள் தான் 15ம் பிரதிவாதி என்றால் சரிதான். 15ம் பிரதிவாதியின் திருமண ஏற்பாட்டை பழனிச்சாமி மற்றும் முருகவேல் உதவியுடன் தான் செய்யப்பட்டதா என்றால் இல்லை. கொண்டம நாயக்கரே செய்து கொண்டார். 15ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு தம்மா நாயக்கர் குடும்பமும், பெருமாள் நாயக்கர் குடும்பமும் செல்லவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி குடும்பத்தாரும் செல்லவில்லை. நான் சொல்வது தவறு என்றும் பழனிச்சாமி குடும்பத்தார் தான் 15ம் பிரதிவாதிக்கு முன் நின்று திருமண ஏற்பாடுகள் செய்தார்கள் என்றும் வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

17) பி.சா.ஆ.1 ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை கொண்டமநாயக்கர் தனது அவசர தேவைக்காக பணம் வேண்டுமென எனது தாயார் பழனியம்மாள், பழனிச்சாமி மனைவி சீலம்மாள், பெருமாள் நாயக்கர் மனைவி பழனியம்மாள் மூவருக்கும் பி.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் இருக்கலாம், அவரது பாகத்தை அவர் விற்றுள்ளார். நாகலெட்சுமிக்கு கொண்டம நாயக்கர் என்ன ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் 2013ம் வருடம் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பார்த்தால் தான் கொண்டம நாயக்கர் என்ன சொத்துக்களை எழுதியுள்ளார் என்ற விபரமும் என்ன குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றும் தெரிய வரும் என்றால் சரிதான்.

18) நாகலெட்சுமிக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தையும் சேர்த்து தான் கொண்டம நாயக்கர் நாகலெட்சுமிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 19ல் தாவா அ பட்டியல் 3வது அயிட்டத்தில் ஆழ்துளை கிணறு இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் நாங்கள் தனிப்பட்ட முறையில் போட்டுள்ளோம். அதன் மின் இணைப்பு எண்.40 ஆகும். மேற்படி ஆழ்துளை கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.1573/6ல் உள்ளது.

19) சர்வே எண்.1573/9ல் 2 ஆழ்துளை கிணறுகள் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.1573/6ல் நாங்கள் போட்டதாக சொல்லும் ஆழ்துளை கிணறு எப்போது போடப்பட்டது என்றால் எனது தகப்பனார் காலத்திலேயே சுமார் 60 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டது. இதை தவிர வேறு எந்த இடத்தில் ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் நான் தனிப்பட்ட முறையில் எனது நிலத்தில் 2 ஆழ்துளை கிணறு அமைத்துள்ளேன். அது குடிநீர் தேவைக்காகவும், ஆடு, மாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தாவா சொத்துக்கள் ரெங்கம நாயக்கரின் சொத்துக்கள் என்றும், தற்போது வரை தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல் ரெங்கம நாயக்கரின் வாரிசுகளால் கூட்டாக அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றும் நான் வழக்கிற்காக பாகம் பிரிக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

20) பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.5ன் பட்டாக்களுக்கு முந்தைய ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு பட்டா எங்கள் பெயரில் மாற்றியுள்ளோம். எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டா இல்லை. எங்கள் பெயரில் உள்ள பட்டாக்களை பெற தனியாக

மனு கொடுத்தோமா என்றால் ஆமாம். தகப்பனார் இறந்த பின்னிட்ட வாரிசு சான்றிதழை இணைத்து மனு கொடுத்தோம். வருவாய்த்துறையினர் இடத்திற்கே வந்து விசாரணை செய்து எங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுத்தார்கள். நான் சொல்வது தவறு என்றும் நான் சொல்வது போல விசாரணை எதுவும் நடைபெறவில்லை என்றும் எனது அதிகாரத்தை பயன்படுத்தி பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.5 பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தற்போது வரை கூட்டுக்குடும்ப சொத்துக்களாக உள்ளதால் வாதிகள் தங்களுக்குரிய பாகத்தை வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எனவே வாதிகள் கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**